[1986 நவம்பர் 18

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பல பணிகளில் அதிகாரிகள் அதாவது இன்ஜினியர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் அந்த பணிகள் முடிவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. புதிதாக வருகின்ற இன்ஜினியர்கள் அந்த பணியை புரிந்து கொண்டு வேலையை தொடங்கும் முன் அவரும் மாற்றப்படுகிறார். ஆகவே, நாட்டின் நலன் கருதி அதிகாரிகள் மாற்றம் என்பது ஒரு கால கட்டத்திற்குள் தான் செய்ய வேண்டும் என்ற ஒரு கண்டிப்பான உத்திரவை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் இந்தத் துறையில் நடக்கவில்லை. காணம் ஒரு அதிகாரி 3 வருடம் இருக்கவேண்டும் என்ற ஒரு கட்டாயம் இருக்கிறது. அதேபோல் 1 1-2 வருட காலத்திற்குள் எந்த காரணத்தைக் கொண் ம் மாற்றக்கூடாது என்பதையும் அப்படி மாற்றுகின்ற நேரத்தில் சரியான காரணம் அவர் மீது இல்லாமல் மாற்றக்கூடாது என்ற உத்திரவை மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கால்வாய் மானாமதுரை தொகுதிக்கும், இளையாங்குடி தொகுதிக்கும் பயன்பட இருக்கிற காரணத்தால் இதைப் பற்றி அதிகாரிகளை கேட்கின்ற நேரத்தில் வெட்டப்படுகின்ற கால்வாயில் தண்ணீர் ஏற முடியாத நிலை இருக்கிற காரணத்தால் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று எங்களிடம் சொன்னார்கள். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லப்பட்ட தகவல் சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறையில் நல்லாறு அணைத்திட்டம்

67. (வினா எண் 8383).—திரு. வி. தங்கவேலு—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) இதன் மதிப்பீடு இன்னும் முடிவாகவில்லை.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு? வேலை எப்போது ஆரம்பிக்கப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எ. ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தினுடைய தற்போதைய மதிப்பீடு 81.50 கோடி ரூபாய். இது நீர்ப்பாசன திட்டம் மட்டும் அல்லாமல் மின் உற்பத்தி திட்டமாகவும் இருக்கிறது. கேரள அரசோடு பேசி முடிவு எடுக்க வேண்டிய ஒன்றாக இருப்பதால் இந்தப் பிரச்சினையை உடனடியாக எடுக்கப் படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அணை கட்டப்படும்போது கீழே உள்ள ஆயக் கட்டுதாரர்களுடைய உரிமை பாதிக்கப்படாத அளவிற்கு கட்டப்படுமா? இதுவரைக்கும் இதுமாதிரி மேலே அணையைக் கட்டும்போது, அணைகள் ஒவ்வொன்றுக்கும் கீழே இருக்கின்ற நிலச்சுவான்தார்கள் பாதிக்கக்கூடிய அளவிற்கு, மேலேயிருந்து தண்ணீர் தடுத்து விடப்பட்டு பாதிப்பு ஏற்படுகிறது. இதிலே ஆயக்கட்டுகள் இருக்கின்றன. நஞ்சை, புஞ்சை பாசன நிலங்கள் இருக்கின்றன. அந்த மாதிரி பாசன நிலங்கள் இருக்கிறபோது, எந்த அளவிற்குக் கீழே தண்ணீர் வந்து கொண்டிருந்ததோ, அந்த அளவிற்குக் குறையாமல் வருவதற்கு ஆவன செய்யப்படுமா?

[1986 நவம்பர் 18

மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்படி அணைக்கட்டுகள் கட்டப்படுகின்ற நேரத்தில், கீழே இருக்கின்ற நஞ்சை நிலமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நிலமாக இருந்தாலும் சரி, அது பாதிக்கப்படாத நிலையில் சிறப்பான முறையில் பார்த்துத்தான் கட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, திட்டத்தை நிறைவேற்றும்போது அந்த நிலைமைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, சீராகக் கட்டப்படும்.

திருமலைராஜன் அரசலாறு கரைகளை அகலப்படுத்துதல்

68—(வினா எண் 8483)—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமலைராஜன், அரசலாறு ஆகிய ஆறுகளின் கரைப்பகுதிகளை அகலப்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்ட முறையே கொஞ்சம் மாறியிருக்கிறது என்று நினைக்கிறேன். கரையை அகலப்படுத்துவதற்காக கேட்கப்பட்ட கேள்வியேயல்ல அது. கரையை அகலப்படுத்த வேண்டாம். இந்த இரண்டு ஏரிகளிலிருந்தும் வாய்க்கால்கள் இருக்கின்ற காரணத்தால், திருமலைராஜன், அரசலாறு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போட்ட கேள்விக்குத்தான் பதில் கிடைக்கும். அதற்கேற்றவாறு கேள்வி கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, திருமலைராஜன் ஏரி, வேளாண்மைத் துறையால் பரிந்துரை செய்யப்பட்டு, திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அப்படி விவசாயத்துறையால் பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால், திருமலைராஜன் ஏரியின் கரைகளை அகலப்படுத்தும் போது,— ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கு விவசாயிகள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்லும்போது கரைகளை வண்டி போக்குவரத்திற்காக வெட்டி விடுகிறார்கள். அதன் காரணமாக வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே அதைத் தவிர்ப்பதற்கு அந்த வண்டிப் பாலத்தையும் அகலப்படுத்துகின்ற பணியை திட்டத்தோடு சேர்த்து பாலம் அமைக்க, அது ஒரு வழி பாலமாக இருந்தாலும் போதும், அரசு முன்வருமா?